## Tamil Nadu Pollution Control Board

## Smokeless Bhogi - 2019

### Press Release

Makar Sankranti is one of the most auspicious days and is celebrated in almost all parts of India. In Tamil Nadu, it is celebrated as Thai Pongal. The day preceding Thai Pongal is called Bhogi. During the Bhogi, at dawn people light a bonfire with logs of wood, cow-dung cakes, other solid-fuels and wooden furniture at home that are no longer useful. However, with the lack of farm wastes in the city, the people in the cities are just keen to make a bonfire with old tyres and tubes, plastic materials, old mates, broomstick, garbage and a few other harmful materials - Thus increasing the levels of various pollutants in atmosphere.

Bonfires lit by residents in the presence of high humidity, low temperature may cause smog which disrupts visibility and put motorises in great hardship and flight operations may also be disrupted because of smog.

In order to create awareness among the public, TNPCB is conducting awareness programme in all the districts in association in the past 15 years. Because of the awareness, the burning of waste materials such as old rubber products, plastics, tyres, tubes is considerably reduced.

This year, TNPCB has conducted awareness programme in Chennai and all District Head Quarters. In Chennai TNPCB in association with Colleges conducted awareness programme in all the 15 Zones for three days through Auto rickshaws having with banners, distributing pamphlets, public address system. Awareness also created through FM Radio, WhatsApp, Face Book and shopping malls etc. In this regard meetings were conducted with NGOs and Resident Welfare Associations. Awareness were created to the school students through School Education Department.

On the day of Bhogi, TNPCB jointly with Police Department has conducted night patrolling by 36 Teams. During the patrolling burning of waste materials were noticed in some places and it was put off by the patrolling team by means of water and sand. More than 100 waste tyres which was kept for firing were seized. It will be sent to Common Hazardous Waste Management Facility at Gummidipoondi.

In order to monitor the ambient air quality in Chennai, TNPCB has conducted air quality survey for 24 hours on pre-bhogi and on bhogi day at 15 locations. The survey report is given in annexure.

The survey report reveals that the overall status of gaseous pollutant viz Sulphur Dioxide ($SO_2$) and Nitrogen Dioxide ($NO_2$) are found to be well within the prescribed standards of 80 $\mu g/m^3$ on both Pre-Bhogi day and Bhogi day. During the Bhogi day the Particulate Matter ($PM_{2.5}$) level was in the range of 20-109 $\mu g/m^3$ as against the prescribed standard of 60 $\mu g/m^3$ and Particulate Matter ($PM_{10}$) was in the range of 126- 249 $\mu g/m^3$ as against the prescribed standard of 100 $\mu g/m^3$. When compared with last year data, the Particulate Matter ($PM_{10}$) level in the ambient air was 40 % lesser.

The Air Port Authorities has stated that there is no disruption to the flight operations on the day of Bhogi. Further in view low humidity, moderate temperature and moderate wind speed the visibility was good. The Public awareness and reduction in burning of waste materials like tyre, tube, rubber, plastic etc., has helped in reduction of pollution level. In this regard Tamil Nadu Pollution Control Board thanks all the Government Departments, NGOs, Residential Welfare Associations, Press and Media and especially General public for their co-operation to celebrate the smoke less Bhogi.

**Happy Pongal**

**Member Secretary**
**Tamil Nadu Pollution Control Board**

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

## புகையில்லா போகி பண்டிகை – 2019

## பத்திரிகை செய்தி

நமது முன்னோர்கள் பொங்கல் திருநாளுக்கு முன் பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற அடிப்படையில் போகி பண்டிகையினை கொண்டாடி வந்துள்ளனர். வீடுகளில் சேகரம் ஆகும் இயற்கை பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட பழைய பொருட்களை தீயிட்டு கொளுத்தி வந்துள்ளனர். இச்செய்கையால் ஏற்பட்ட காற்று மாசுபாடு இயற்கையால் ஜீரணிக்கப்பட்டு சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாமல் இருந்து வந்துள்ளது.

ஆனால் இன்றைய சூழலை எடுத்துக்கொண்டால், போகி பண்டிகை அன்று பழைய பொருட்களான பிளாஸ்டிக், செயற்கை இழைகளால் தயாரிக்கப்பட்ட துணிகள், ரப்பர் பொருட்கள், பழைய டயர் மற்றும் டியூப், காகிதம், இரசாயனம் கலந்த பொருட்கள் போன்றவற்றை எரிப்பதால் காற்று மாசு ஏற்படுகிறது.

சென்னை நகரில் போகி அன்று எரிக்கப்படும் மேற்படி பொருட்களால் புகை மண்டலம் ஏற்பட்டு வாகன ஓட்டிகளுக்கு மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதோடு விபத்துகளுக்கும் காரணமாக உள்ளது. சில சமயங்களில் விமான போக்குவரத்தும் பாதிக்கப்படுகின்றது. பழைய பிளாஸ்டிக் பொருட்கள், டயர் மற்றும் டியூப் போன்றவற்றை எரிப்பதால் வெளிப்படும் நச்சு வாயுக்களால் மூச்சு திணறல், கண் எரிச்சல் போன்ற நோய்களால் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது.

இத்தகைய செயல்கள் பொது மக்களிடம் விழிப்புணர்வு இல்லாமையால் ஏற்பட்டு வந்தது. இதனை தவிர்க்க, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கடந்த 15 ஆண்டுகளாக போகிபண்டிகைக்கு முன் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றது. இதன் காரணமாக கடந்த வருடங்களில் பழைய ரப்பர் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் டயர், டியூப் போன்றவை எரிப்பது பெரும்பாலும் குறைந்துள்ளது.

இந்த ஆண்டும் சுற்றுச்சூழல் மாசு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில், சென்னை மாநகரம் மற்றும் அனைத்து மாவட்ட தலைமையிடங்களிலும்

விழிப்புணர்வு பிரச்சாரத்தினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நடத்தியது. அதன்படி சென்னையில் கல்லூரிகளுடன் இணைந்து 15 மண்டலங்களிலும் வாகனங்கள் மூலம் 3 நாட்கள் கையேடுகள் வழங்கியும், விளம்பர பலகை தாங்கியும், பொது அறிவிப்பு செய்தும் பொதுமக்களிடையே புகையில்லா போகி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் பண்பலை ரேடியோ மூலமும் ஒலிபரப்பு செய்யப்பட்டது. வாட்சப், முகநூல் மற்றும் பேரங்காடிகள் மூலமும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மேலும் அரசு சாரா அமைப்புகள் மற்றும் குடியிருப்போர் நல சங்கங்கள் ஆகியோருடன் கூட்டம் நடத்தப்பட்டு புகையில்லா போகி குறித்து அறிவுறுத்தப்பட்டது. மேலும் பள்ளி கல்வித்துறையின் மூலம் புகைமாசு பற்றி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த ஆண்டு சென்னையில் போகி பண்டிகைக்கு முன்தினம் தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 36 குழுக்கள் அமைத்து காவல் துறையுடன் இணைந்து அனைத்து மாநகராட்சி மண்டலங்களிலும் இரவு ரோந்து பணி மேற்கொண்டது. ரோந்து பணியின் போது சில இடங்களில் பழைய பொருட்கள் எரிப்பது கண்டுபிடிக்கப்பட்டு தண்ணீர் மற்றும் மணல் கொண்டு அனைக்கப்பட்டது. மேலும் எரிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட பழைய டயர்கள் கைப்பற்றப்பட்டது. இது கும்மிடிப்பூண்டியில் உள்ள தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மை செய்யும் பொது அமைப்பிற்கு அனுப்பப்பட உள்ளது.

போகிப்பண்டிகையின் போது சென்னை மாநகரத்தின் சுற்றுச்சூழல் காற்று தரத்தினை கண்காணிப்பு செய்யும் பொருட்டு, வாரியம் போகிப்பண்டிகையின் முந்தைய நாள் மற்றும் போகிப்பண்டிகை நாளிலும், 15 இடங்களில் 24 மணிநேரமும் காற்றுத்தரத்தினை கண்காணிக்க காற்று மாதிரி சேகரிப்பு செய்தது. ஆய்வறிக்கை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

**இந்த ஆய்வின்படி கந்தக–டை–ஆக்ஸைடு, நைட்ரஜன் ஆக்ஸைடு ஆகிய வாயுக்களின் அளவு அனைத்து 15 மண்டலங்களிலும் அனுமதிக்கப்பட்ட தர அளவுக்கு (80 மைக்ரோகிராம்/கனமீட்டர்) இரண்டு நாட்களிலும் குறைவாக இருந்தது கண்டறியப்பட்டது. போகி நாளன்று நுண்துகள்கள் ($PM_{2.5}$ மைக்ரான் அளவு) 20 மைக்ரோகிராம்/கனமீட்டர் முதல் 109 மைக்ரோகிராம்/கனமீட்டர் வரை இருந்தது. (நிர்ணயிக்கப்பட்ட தர அளவு 60 மைக்ரோகிராம்/கனமீட்டர்) மற்றும் நுண்துகள் ($PM_{10}$ மைக்ரான் அளவு) 126 மைக்ரோ கிராம்/கனமீட்டர் முதல் 249 மைக்ரோகிராம்/கனமீட்டர் வரை இருந்தது. (நிர்ணயிக்கப்பட்ட தர அளவு 100 மைக்ரோகிராம்/கனமீட்டர்). போகி நாளான இன்று (14.01.2019) குறைந்த ஈரப்பதம்,**

**மிதமான வெப்பநிலை மற்றும் மிதமான காற்றின் வேகம் காரணமாக $PM_{10}$ நுண்துகள்கள் அளவு சராசரியாக கடந்த ஆண்டை விட 40 சதவீதம் குறைந்த அளவில் இருந்தது.**

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது காற்று மாசு காரணிகளின் அளவு குறைந்திருந்த காரணத்தினால் இந்த ஆண்டு விமான புறப்பாடு மற்றும் வருகை போக்குவரத்தில் தொலைதூர காணும் தண்மை (Visibility) நன்றாக இருந்ததால் எந்தவித இடையூறும் ஏற்படவில்லை என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தளவு மாசு அளவு குறைந்ததற்கு பொதுமக்களிடையே இருந்த விழிப்புணர்வும், டயர், டியூப், ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் போன்ற பொருட்களை எரிக்காமல் ஒத்துழைப்பு தந்ததும் முக்கிய காரணமாகும். இதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அரசு துறையினருக்கும், அரசுசாரா அமைப்பினருக்கும், குடியிருப்போர் நலச்சங்கங்களுக்கும், செய்தி மற்றும் ஊடகங்களுக்கும் குறிப்பாக பொதுமக்களுக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

// இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்//

******

உறுப்பினர் செயலர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

TAMIL NADU POLLUTION CONTROL BOARD

**Advanced Environmental Laboratory, Chennai - 600 032.**

AMBIENT AIR QUALITY OF CHENNAI ON PRE - BHOGI and BHOGI FESTIVAL DAY

**Comparative Statement of Ambient Air Monitoring during Pre - Bhogi and Bhogi Festival from 2016 to 2019**

| Zone No & Name | Year | 2016 | | | | | | 2017 | | | | | | 2018 | | | | | | 2019 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Pollutants concentration in µg/m3 (24 hrs average) | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | Parameter | $SO_2$ | | $NO_2$ | | RSPM | | $SO_2$ | | $NO_2$ | | RSPM | | $SO_2$ | | $NO_2$ | | RSPM | | $SO_2$ | | $NO_2$ | | RSPM | | $PM_{2.5}$ | |
| | Monitoring Day ⇒ Location ⇓ | Pre - Bhogi | Bhogi | Pre - Bhogi | Bhogi | Pre - Bhogi | Bhogi | Pre - Bhogi | Bhogi | Pre - Bhogi | Bhogi | Pre - Bhogi | Bhogi | Pre - Bhogi | Bhogi | Pre - Bhogi | Bhogi | Pre - Bhogi | Bhogi | Pre - Bhogi | Bhogi | Pre - Bhogi | Bhogi | Pre - Bhogi | Bhogi | Pre - Bhogi | Bhogi |
| I Thiruvottiyur | Kathivakkam | 11 | 15 | 12 | 19 | 60 | **175** | 11 | 16 | 12 | 18 | 61 | **184** | 11 | 14 | 13 | 16 | 56 | **204** | 11 | 13 | 13 | 15 | 61 | **126** | 36 | 72 |
| II Manali | Manali | 11 | 14 | 12 | 18 | 106 | **298** | 12 | 15 | 12 | 19 | 86 | **237** | 12 | 15 | 13 | 18 | 72 | **263** | 11 | 14 | 14 | 15 | 79 | **156** | 42 | 90 |
| III Madhavaram | Thillai Nagar | 11 | 17 | 13 | 18 | 89 | **167** | 12 | 17 | 13 | 19 | 84 | **150** | 13 | 15 | 16 | 21 | 103 | **215** | 12 | 14 | 15 | 17 | 92 | **160** | 63 | 91 |
| IV Tondiarpet | Tablets India Ltd | 7 | 10 | 14 | 18 | 97 | **230** | 7 | 10 | 15 | 18 | 67 | **172** | 7 | 12 | 14 | 19 | 78 | **241** | 10 | 14 | 10 | 18 | 164* | **249*** | -- | 46 |
| V Royapuram | Royapuram | 8 | 12 | 14 | 19 | 115 | **238** | 8 | 11 | 14 | 18 | 89 | **234** | 8 | 16 | 15 | 17 | 75 | **235** | 10 | 24 | 6 | 12 | 106 | **210** | 57 | 57 |
| VI Thiru. Vi. Ka. Nagar | Thiru. Vi. Ka. Nagar | 12 | 15 | 14 | 19 | 95 | **291** | 12 | 16 | 13 | 21 | 82 | **276** | 13 | 15 | 14 | 19 | 90 | **353** | 12 | 13 | 14 | 16 | 81 | **167** | 58 | 95 |
| VII Ambattur | Ambattur | 11 | 13 | 11 | 15 | 93 | **221** | 12 | 14 | 12 | 15 | 82 | **306** | 12 | 14 | 14 | 17 | 90 | **343** | 12 | 14 | 14 | 15 | 97 | **189** | 68 | 109 |
| VIII Anna Nagar | Kilpauk, Anna Nagar | 9 | 11 | 15 | 19 | 110 | **202** | 7 | 10 | 14 | 17 | 92 | **166** | 8 | 15 | 14 | 19 | 106 | **270** | 8 | 18 | 21 | 21 | 116 | **149** | -- | 20 |
| IX Teynampet | T. Nagar, Bus Depot | 9 | 18 | 11 | 18 | 88 | **118** | 7 | 11 | 13 | 16 | 41 | **133** | 8 | 15 | 19 | 21 | 128 | **169** | 13 | 17 | 24 | 31 | 181 | **194** | -- | 62 |
| X Kodambakkam | Kodambakkam | 7 | 10 | 13 | 17 | 105 | **231** | 7 | 9 | 13 | 16 | 80 | **150** | 10 | 14 | 16 | 20 | 125 | **339** | 7 | 16 | 7 | 14 | 96 | **137** | -- | 26 |
| XI Valasaravakkam | Karapakkam | 10 | 19 | 13 | 21 | 93 | **226** | 9 | 12 | 16 | 19 | 62 | **234** | 8 | 19 | 15 | 28 | 154 | **386** | 12 | 14 | 21 | 26 | 145 | **185** | -- | 63 |
| XII Alandhur | Meenam Bakkam | 8 | 26 | 14 | 25 | 101 | **176** | 7 | 11 | 14 | 17 | 50 | **186** | 8 | 11 | 20 | 23 | 93 | **135** | 11 | 13 | 22 | 25 | 99 | **162** | -- | 52 |
| XIII Adyar | Besant Nagar | 6 | 26 | 11 | 20 | 86 | **208** | 7 | 9 | 13 | 18 | 48 | **70** | 6 | 9 | 11 | 17 | 105 | **172** | 10 | 12 | 20 | 24 | 78 | **135** | -- | 44 |
| XIV Perungudi | ThuraiPakkam | 8 | 25 | 13 | 27 | 92 | **112** | 8 | 11 | 11 | 17 | 58 | **140** | 9 | 14 | 13 | 24 | 114 | **203** | 12 | 14 | 22 | 24 | 81 | **166** | 52 | 56 |
| XV Sholinganallur | Sholinganallur | 5 | 16 | 11 | 20 | 66 | **121** | 9 | 10 | 12 | 13 | 73 | **185** | 7 | 13 | 14 | 19 | 112 | **141** | 13 | 13 | 22 | 24 | 65 | **135** | -- | 45 |
| National Ambient Air Quality Standards | | **80** | | **80** | | **100** | | **80** | | **80** | | **100** | | **80** | | **80** | | **100** | | **80** | | **80** | | **100** | | **60** | |

* Metro Rail work under progress

Dy.CSO

DD (Labs) II